அனுப்புநர்
திருமதி.த.விஜயலட்சுமி
எம்.எஸ்ஸி.,எம்.எட்.,
முதன்மைக்கல்வி அலுவலர்,
அரியலூர்.

பெறுநர்
முதன்மைக்கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டம்.

230

N, C – mail
12/01/23
1:24PM

B2
12/01/23
mail send to DIPE

ந.க.எண்.05863/ஆ4/2022, நாள். .01.2023

பொருள் : உடற்கல்வி – மாநில அளவிலான கேரம் / சிலம்பம் / சாலையோர மிதிவண்டி ( State Level RD/BD Games ) புதிய விளையாட்டுப் போட்டிகள் அரியலூர் மாவட்டத்தில் நடத்துதல் – நடுவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்களை பணிவிடுப்பு செய்து அனுப்பக்கோருதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் ( நாட்டு நலப் பணித்திட்டம் ) செயல்முறைகள் ந.க.எண். 013102/எம்/இ4/2022 நாள். 08.07.2022, 17.10.2022 மற்றும் 15 .11.2022

12 JAN 2023

............

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின்படி மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகள் சிலம்பம் , கேரம் , சாலையோர மிதிவண்டி ( State Level RD/BD Games ) நடத்திட அரியலூர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போட்டிகள் அனைத்தும் கீழ்கண்டுள்ளவாறான இடங்களில் எதிர்வரும் 19.01.2023 முதல் 22.01.2023 வரை நடைபெற உள்ளது. போட்டிகள் சிறப்பாக நடத்திடும் பொருட்டு இணைப்பில் கண்டுள்ள தங்கள் மாவட்ட உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் நடுவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாவட்ட உடற்கல்வி ஆள்வாளர்கள், இருபால் உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் / அணி மேலாளர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) அவர்களின் தலைமையில் 18.01.2023 அன்று மாலை 4.00 **மணியளவில் கீழப்பழூர், சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்** நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வகையிலும் மற்றும் நடுவர்களாக பங்கேற்கும் வகையிலும் பணிவிடுப்பு செய்து அனுப்பிவைத்திடவும் போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு தங்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு – நடுவர்கள் பெயர்ப்பட்டியல்

முதன்மைக்கல்வி அலுவலர்
அரியலூர்.

நகல்
1. சென்னை 06, பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநர் (நா.ந.ப) அவர்களுக்கு பணிந்தனுப்பலாகிறது.
2. சென்னை 06, முதன்மை உடற்கல்வி ஆள்வாளர் அவர்ளுக்கு தகவலின் பொருட்டு அனுப்பலாகிறது.

12/1/23

தகவலுக்காக தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

13/01/23

<u>போட்டியின் விவரம்</u>

| வ. எண் | போட்டிகள் | போட்டி நடைபெறும் இடம் | தேதி |
|---|---|---|---|
| 1 | சிலம்பம் (மாணவிகள்) | சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழப்பழூர் | 19.01.2023 (ம) 20.01.2023 |
| 2 | சிலம்பம் (மாணவர்கள்) | சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழப்பழூர் | 21.01.2023 (ம) 22.01.2023 |
| 3 | கேரம் (மாணவிகள்) | விநாயகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழப்பழூர் | 19.01.2023 (ம) 20.01.2023 |
| 4 | கேரம் (மாணவர்கள்) | விநாயகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழப்பழூர் | 21.01.2023 (ம) 22.01.2023 |
| 5 | சாலையோர மிதிவண்டி (மாணவ / மாணவிகள்) | சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழப்பழூர் | 21.01.2023 |

முதன்மைக்கல்விஅலுவலர்
அரியலூர்.